செ.வெ.எண்-10 நாள்-08.01.2018

# அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் காதி கிராப்ட் தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியம் சார்பில் பொங்கல் பண்டிகை கதர் மற்றும் கிராம பொருட்கள் சிறப்பு விற்பனையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அரங்கத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் காதிகிராப்ட் சார்பில் பொங்கல் பண்டிகை கதர் மற்றும் கிராமப் பொருட்கள் சிறப்பு விற்பனை நிலையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் பார்வையிட்டு முதல் விற்பனையினை தொடங்கி வைத்தார்கள்.

மாவட்ட வருவாய் அலுவலர் **திரு.சே.தனசேகரன்** அவர்கள் முன்னிலை வகித்தார்.

அரியலூர் மாவட்டத்தில் காதி கிராப்ட் சார்பில் பண்டிகைக் கால சிறப்பு விற்பனையாக கதர் மற்றும் பட்டு ரகங்களுக்கு 30 சதவீதம் வரை தள்ளுபடி விற்பனையும், மெய்மையான கதர் ரகங்கள், மெத்தை, தலையனை, தராமான அசல் பட்டு புடைவைகள், சோப்பு வகைகள், பூஜை பொருட்கள், தேன் மற்றும் இதர பொருட்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தது.

அரசு ஊழியர்களுக்கு கதர் மற்றும் பட்டு ரகங்களுக்கு 10 மாத தவனை முறையில் கடன் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

இச்சிறப்பு விற்பனையை தொடங்கி வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் பொருட்கள் வாங்கி தொடங்கி வைத்தார்கள்.

கதர் கிராம தொழில் மேம்பட பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள், பணியாளர்கள் அனைவரும் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள சிறப்பு விற்பனை நிலைத்தில் 08.01.2018 முதல் 14.01.2018 வரை துணிகள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கி பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில், அரியலூர் மாவட்ட காதிகிராப்ட் கண்காணிப்பாளர் எஸ்.ஆனந்தன், விற்பனையாளர் எஸ்.இளங்கோ மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**